DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : ST**C 2122/2025** |
| Deposition of Witness for | : PW2 |
| Name | : வசந்தா |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 08.08.2026. |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 08 August 2026.

**எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது கொக்குகுளத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 எனது கணவர் ஆவார். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. எதிரிகளுடன் சமாதனமாக சென்றுவிட்டேன். போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**அரசுதரப்பில் குறுக்குவிசாரணை**

நான் போலீசார் விசாரணையில் எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடம் சம்மந்தமாக விற்பணை செய்வதில் முன்விரோதம் இருந்து வந்து அதன்தொடர்ச்சியாக கடந்த 13.06.2025 இரவு 7.30. மணிக்கு ஆஜர் எதிரி வயல்ராமன் அ.சா.1–க்கு போன் செய்து தான் பால்ராஜ் என்வரின் வீட்டில் இருப்பதாகவும், தைரியம் இருந்தால் வீட்டிற்கு வா என்று கூறியதன் அடிப்படையில் நானும் அ.சா.1–ம் பால்ராஜ் வீட்டிற்கு சென்ற போது அங்கு இருந்த எதிரிகள் எங்களை பார்த்து அசிங்கமாக பேசி மருதுபாண்டி கம்பாலான களைவெட்டி கனையால் அ.சா.1–ன் வலது கண் புருவம், இடது கண் கீழ், வலது முட்டிக்கு கீழ் அடித்து இரத்தக்காயம் ஏற்படுததினார் என்றும், வயல்ராமன், பால்ராஜ் கையால் அ.சா.1–ன் வலது கண்ணம், இடது கண்ணத்தில் அடித்தார்கள் என்றும்,அப்போது அருகில் இருந்த நானும், இராமதுரைச்சியும், எதிரிகளை பார்த்து சத்தம்போட்டோம் என்றும் அப்போது எதிரிகள் மூவரும் அ.சா.1–க்கு கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றும், பின்பு அடிபட்ட அ.சா.1–யை என் மகன் உமேஸ்வரன் அடிபட்ட அ.சா.1–யை சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார் என்றும், அங்கு வந்த அய்யாபுரம் போலிசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் மேற்படி சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதால் அவர்களுக்கு அனுசரனையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

M MARI Digitally signed by M MARI Date: 2026.08.08 18:45:45 +0530